முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திரு. பா. கௌதமன், பி.ஏ., பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி.

வா.சா. 1 நாள். 23.09.2019

| அ.வ.எண். | 193/2015 | | |
|---|---|---|---|
| பெயர் | மோகன்தாஸ் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

பிரதிவாதி என்னிடம் 25.04.2014 அன்று கடன் பெற்றார். எனது நண்பர் ஜெயராஜ் என்பவரின் மருந்துக்கடையில் வைத்து பிரதிவாதி கடன் பெற்றார். ரூ.2 லட்சத்தை ரொக்கமாக கொடுத்தேன். வாசாஆ 1 பிராமிசரி நோட்டில் கையெழுத்திட்ட சாட்சி ஜெயராஜ் என்பவரை நான் அழைத்து வந்துள்ளேன். பிரதிவாதி என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும் பிரதிவாதியின் தம்பி மதன்ராஜ் தான் கடன் வாங்கினார் என்றாலும் சரியல்ல. புரோநோட்டை மருந்துக்கடை வைத்துள்ள ஜெயராஜ் நிரப்பினார். பிரதிவாதி புரோநோட்டில் கையெழுத்து செய்தார். 27.05.2015 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அதை பிரதிவாதி பெற்றுக் கொண்டார் பதில் எதுவும் அனுப்பவில்லை. ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்தும் வாசாஆ 1 பிராமிசரி நோட்டில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்தும் வேறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில்தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைமனுவில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்தும் பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்தும் வேறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக இவ்வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். பிரதிவாதியின் தம்பி மதன்ராஜை எனக்கு தெரியும். அவர் மீது கடனை திருப்பி கேட்டு மணல்மேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதியின் தம்பி மதனசிவராஜ் தான் என்னிடம் ரூ.80,000/- கடன் பெற்றிருந்தார் என்றாலும், புரோநோட்டில் சாட்சி 1 ஆக கையெழுத்து செய்துள்ள ஜெயராஜிடம் ரூ.50,000/- கடன் பெற்றிருந்தார் என்றாலும், பிரதிவாதி அவரது மாமா மகன் ஜோஜேந்திரனிடம் கொடுத்திருந்த கிரய பத்திரத்தை பிரதிவாதிக்கு தெரியாமல் மதனசிவராஜ் பெற்று என்னிடம் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. மதனசிவராஜ் மணல்மேடு பேரூராட்சி துணை தலைவராக இருந்தார். அதனால் மதனசிவராஜிடம் கடனை திருப்பி கேட்க முடியாது என்பதால் அவரது அண்ணனான பிரதிவாதியின் ஆவணத்தை வைத்து அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மதனசிவராஜ் மீது மணல்மேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது நான் தான் கந்துவட்டிக்கு பணம் கொடுத்துள்ளதாக சொன்னதால் பிரதிவாதியின் மீது இந்தவழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்த போது தான் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜரானார் என்றால் சரிதான். மதனசிவராஜ் என்னிடம் வாங்கிய அசல் ரூ.80,000/- ஐ திருப்பி கொடுத்துவிட்டார் என்றாலும் வட்டியாக ரூ.25,000/- மட்டும் கொடுக்க வேண்டியுள்ளது என்றாலும் மேற்படி பணத்திற்காக பிரதிவாதி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நானும் வாசாஆ 1 ல் சாட்சி கையெழுத்திட்டுள்ள இருவரும் சேர்ந்து வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. திருச்சிற்றம்பலம் ஜெயராஜ் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். வாசாஆ 1 பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.